**செய்தி வெளியீடு எண்:1193** **நாள்:24.11.2021**

**செய்தி வெளியீடு**

நமது நாட்டின் அரசமைப்பு சட்டத்தினை நாம் ஏற்றுக் கொண்ட நாளினை நினைவு கூறும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 ஆம் தேதி அரசமைப்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு அரசமைப்பு தின விழா மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் 26.11.2021 அன்று 11 மணியளவில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் மேதகு குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு மக்களவை சபாநாயகர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்க உள்ளனர்.

இவ்விழாவினை பொதுமக்கள் பொருத்தமான வகையில் கொண்டாடுவதற்காக இந்திய அரசின் நாடாளுமன்ற விவகாரங்கள் துறையால் உருவாக்கப்பட்டுள்ள கீழ்காணும் வலைத்தளங்களின் மூலம் பொதுமக்கள் பங்கேற்கலாம்.

- https://readpreamble.nic.in (இணைய வழி மூலம்–அரசமைப்பின் முகப்புரையை 23 மொழிகளில் அதாவது 22 அலுவல் மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் படிக்கலாம்)
- https://constitutionquiz.nic.in (இணைய வழி மூலம்–அரசமைப்பு ஜனநாயகம் தொடர்பான வினாடி–வினாவில் பங்கேற்கலாம்.)

மேற்கண்ட வலைத்தளங்கள் 26.11.2021 முதல் செயல்பாட்டுக்கு வரும் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

**அரசு செயலாளர் (சட்ட விவகாரங்கள்).**
**சட்டத்துறை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**